# திருவடி மாலை

ரா. இராகவையங்கார்

பதிப்பாசிரியர்
பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை

# திருவடி மாலை

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்
சேது சமஸ்தான மகாவித்துவான்
பாஷா கவிசேகரர்
**ரா. இராகவையங்கார்**

பதிப்பாசிரியர்
**பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை**
(ஓய்வு-தமிழ்ப் பல்கலைக் கழகம்)

**கவிமணி வெளியீடு**
61, பாலகிருஷ்ண நாயக்கர் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-600 033.

முதற் பதிப்பு : மே - 1996

உரிமை : பேராசிரியர் டாக்டர் ரா. விஜயராகவன்

விலை : ரூ. 10-00

விற்பனை உரிமை :

**பாரதி புத்தகாலயம்**
ஜி-7, அமுதம் குடியிருப்பு
தெற்குப் போக்குச் சாலை
தியாகராய நகர்
சென்னை-600 017

[illegible]

# முகவுரை

திருவடி மாலை என்பது தெய்வ தோத்திரமாலை. திருவள்ளுவர் கடவுள்வாழ்த்து என்னும் முதல் அதிகாரத்தில் தெய்வத் திருவடிகளையே போற்றுகிறார்.

''எழுத்துக்களுக்கு எல்லாம் அகரம் முதல் மூலமாயருப்பது போல, உலகு ஆதிபகவனை முதலாகக் கொண்டுள்ளது'' என்று குறித்தவர் அடுத்து வரும் குறளில்,

'கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்'

என்று இறைவன் திருவடி தொழுதலைச் சுட்டுகிறார். இவ்வதிகாரத்தின் பிற குறள்களிலும் அடி, தாள் என்னும் சொற்களையே குறிப்பிடுகிறார். இங்ஙனமாகவே இறைவன் திருவடி வணங்கவே கடவுள் வாழ்த்து— என்பது பெறப்படும்.

''உலகு எலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நில உலாவிய நீர்மலி வேணியன்
அலகுஇல் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம''

என்று தெய்வச் சேக்கிழார் சோதிவடிவான இறை திருவடியை முதலில் போற்றியே தம் புராணத்தைத் தொடங்குகிறார்.

திருவடிமாலை என்னும் இந்நூல் திருமாலைப் போற்றிப் புகழ்கிறது. இறைவனிடம் பக்தி செலுத்துவது ஒருபாலாக, இறைவன் அடியார்க்கு அடியன் ஆதல் வேண்டும் என்கிறார் சுந்தரர். இவர் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில், 'தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று தொடங்கி, ஒவ்வொரு நாயன்மாரையும் சுட்டி, அவர்க்கு அடியேன் என்கிறார்.

மகாவித்துவான் ரா. இராகவையங்கார் திருவடி மாலையின் தொடக்கத்தில் உள்ள வாழ்த்தில், 'திருவினிய பொய்கை' என்று பொய்கையாழ்வார் முதலாக 'குருகைமகிழ் மாறன் பெரிய சடகோபன்' ஆகிய குரவர்தாள் சேர்குவர் அடிமையானே' என்று குறித்தல் அவர் தம் அடியார்க்கு அடியனாகும் பத்தி நிலையைக் காட்டும்.

திருவடிமாலையில் சிலபாடல்கள் திருமால் திருவடிகளைப் போற்றுகின்றன. சட கோபரைச் சில பாடல்கள் துதிக்கின்றன. பலபாடல்கள் கிருஷ்ணாவதாரம், இராமாவதாரம், நரசிங்காவ வதாரம் முதலிய அவதாரங்கள் பற்றியவையே திருவேங்கடம், திருவரங்கம், திருமாவிருஞ சோலை, திருப்புல்லாணி முதலிய திருப்பதிகளில் எழுந்தருளிருள்ள எம்பெருமான்களைப் பற்றியவை பல. திருமால் அருள் வேண்டும் பாடல்கள், மாயோனிடம் முறையிடும் பாடல்கள் சிற்சில, இவ்வாறு திருவடிமாலை பத்தி ரசம் கனிய அமைந்த இன்னிசைப் பாடல்களாகும்.

திருவடிமாலையின் இறுதியில் இராமநாம மகிமை உரைக்கும் 'சீராமநாமப் பாட்டு' என்னும் பகுதி உள்ளது.

கல்லாரும் கற்றாரும் கற்கும் நாமம்
கங்கை முதல் தீர்த்த பயன் காட்டுநாமம்
வில்லாரும் வீரர் செயம் வேண்டும் நாமம்
மெய்ம்மைக்கே பரியாயம் வேண்டும்நாமம்

என்று இவ்வாறு இராம நாமமகிமை பேசுதலை இப்பகுதியில் காணலாகும்.

இந்தப் பக்திப் பனுவல் மகாவித்துவான் வாழ்நாளிலேயே 1933ஆம் ஆண்டு முதன் முறையாக வெளிடப் பெற்றது. 66 ஆண்டுகளுக்குப் பின் வெளியாகும் இப்பதிப்பினைத் தமிழார்வலர்கள் பெற்றுப் பயன்பெறுவார்களாக.

கவிமணி நிலையம்
28 - 3 - 96

**மு. சண்முகம் பிள்ளை**

# திருவடி மாலை

## வாழ்த்து

1. திருவினிய பொய்கை கருவினொளிர் பூதன்
செகமுழுவ தும்பே யெனவகலு நன்பேய்
மருவினிய பாணன் வளர்மழிசை யூரன்
மகிழ்புதுவை நாதன் மதுரகவி கோதை
அரசினுயர் கொங்கர் மகிபகுல துங்கன்
அடியர்பத தூளி யணிகுறைய லாளி
குருகைமகிழ் மாறன் பெரியசட கோபன்.
குரவரிவர் தாள்சேர் குவரடிமை யானே.

2. விதியோர்தர வியலாதமு குந்தன்மிசை யன்பின்
விதுரற்கொரு சபரிக்கெழு பதினாயிர மதிகன்
மதியோர்புகழ் குருகூர்மகிழ் மாறன்சட கோபன்
மதுரத்தமி ழமிழ்தைப்பொரு மறையைப்பொழி
[முகிறாள்
துதியோர்குரு வழிபாடுசெய் கோளூர்மறை வாணன்
றுகடீர்மது ரகவீச னிணைச்செம்பத பதுமங்
கதியோர்தரு பூதூரெதி ராசன்பத கஞ்சங்
கலைதேர்வர வரயோகிகள் கழலேதொழு
[வோமே.

## நூல்

1. பொருள்கொடுத்து வசைகேட்கும் புல்லர்க் கேயும்
பொறுக்கரிதாய்ச் செவிசுடும்வெம் புன்சொல்
கருள்கொடுத்து மீளாவீ டாங்கே நல்கு [பெய்தாற்
மம்மானின் றிருவுளத்துக் காகு மென்றே
தெருள்கொடுத்த பெரியவர்க்குந் தெளிய லாகாத்
தெய்வங்கள் தெய்வதமாஞ் செம்மா லுன்னை
யிருள்கொடுத்த நெஞ்சினொடு மேத்து வேன்போ
லிழித்துரையிற் பழித்துரைப்பா னெண்ணி
[னேனே.

2. மறையெடுத்துன் குணத்தொன்று வழுத்தப் புக்கு
மனம்வாக்குக் கெட்டாத மகிமைத் தென்றே
யிறையெடுத்துச் சொலமாட்டா தீண்டு மீண்ட
வேற்றமுள போற்றுமுளச் சோதீ யுன்னைத்
துறையெடுத்த நெறிதோன்றா நாயே னெய்தச்
சொல்லாலே கூவுகின்ற தெல்லாம் பாலர்
பிறையெடுத்து விளையாட வாவா வென்று
பிதற்றுகின்ற தன்மையினும் புன்மைத் தம்மா.

3. ஏரிதான் மாரியினுக் கேது வாயி
னிருவிழிநோக் கிரவிவரற் கேது வாயிற்
சீரிதா நின்னருட்கு நாயேன் செப்புஞ்
சிறுசொல்லு மேதுவெனச் சிறக்கு மம்மா
பாரினீ யருள்செய்வாய் செய்யா யானோ
பயன்கருதேன் பருகுபவன் பருகா துய்யா
னோரில்யா னவனாக வுன்னை யேத்தா
துய்யாமை யேத்தினே னுடைய கோவே.

4. சொல்லாலே மேலாப்புச் செய்து வானிற்
றிகழ்சோலை மலைமேய தேவ தேவே
சொல்லாலே யுனைவழுத்தத் துணிவ தெல்லாந்
துகிலாலே யெரியவிக்கத் துணிவ தாகும்

வில்லாலே யாகாய மெய்வ தாகும்
விரலாலே வளியளக்க மேவ லாகுங்
கல்லாலே பெருங்கடனீர் கடத்த லாகுங்
காலாலே வானேறக் கற்ப தாமே.

5. அவியாத் தருப்பைவெஞ் சாயக
மாஞ்சிலை யாரணங்காந்
தவியாக் கரியர சாகுந்
தயிர்க்குடத் தங்குழுத்தி
செவியாற் கனவினுந் தெய்வக்
கவிதை தெரிந்திலெனைக்
கவியாக்கி யாண்ட முழுமுதற்
றொன்மைக் கடவுளுக்கே.

6. ஏழு லோகமும் வாழ வென்றொரு
சோழ மண்டல மீதுதன்
னிணையில்காவிரி நடுவி லேயர
வணையிலே வளர் தெய்வதம்
மாழை மாதகலாது மின்னென
மார்பி லேயொளி ரருண்முகில்
வளமி குந்தமிழ் மறைமொ ழிந்துயர்
பதின்ம ராடு குணக்கடல்
வேழ மென்பதன்வாயி னால்வெளி
யாகி வந்த விழுப்பரம்
வேத முள்ளன யாவையும்முத
லீறு மோதும் வியன்சுடர்
ஊழி யின்னுயிர் முழுதை யுந்தன
துதரம் வைத்த தனிப்பொருள்
உம்ப ரிம்பரெ லாமு நாபியி
லுதய மாமுழு முதலரோ.

7. கடன்மிசைக் கிடந்த கருணைவா ரிதியைக்
கன்மழை தடுத்தகார் முகிலை
யடன்மிசைத் தேவர்க் கமுதுபெய் யாரா
வமுதினை யலர்மகட் கணியை

மடன்மிசைத் தேன்பாய் மாலிருஞ் சோலை
மலைமிசை மரகத மலையை
யுடன்மிசைச் சுழலும் புன்பிறப் பொழிவா
னுள்ளினே னெள்ளினே னுலகே.

8. பல்லா யிரம்பழி சூழ்கின்ற யானுன் பதுமபத
மல்லாற் றொழுது துதித்தறி யேனகி லாண்டமுத
மெல்லாம் வயிற்றி னடக்கி யளிக்கின்ற வின்னருட்கு
நல்லார் பொல்லாரென் றிருகூறு செய்யு நவையு
[முண்டே.

9. பிள்ளைப் பருவத் தொருகுழவி
பெரியோர் கையாற் றொழத்தொழுது
பேணி யவர்தா முரைத்தமொழி
பிதற்றி யிருக்கும் பெற்றியைப்போ
லுள்ளத் துருகு மன்பர்தொழி
லுதனை நடிக்க வுவந்துனசீர்
உள்ள படியொன் றுணரும்வலி
யொழிந்த விழிந்த நாயடியேன்
எள்ளத் தனையு மிளகாத
விருப்பு மனத்தாற் பொய்ந்நாவா
லீயா திவறுங் கொடுங்கையா
லெண்ணி யியம்பித் தொழலெல்லாங்
கொள்ளத் தினையுந் திருவுளத்துக்
குறித்த லுளதோ கோகனகக்
கோயில் வளர்ந்த கொடிபடர்ந்த
கொடைக்கற் பகமே குணக்கடலே.

10. வெருவித் துயர்படு கடலைப் பொருபிற
வியினிற் சுழல்வரும் வினைதீர
மருவித் தொழுமன மதனைத் தருவதுன்
மகிமைத் திருவரு ணெறியாமே

குருவிற் பொலிகுல முழுதுக் கொருபதி
குருகைப் பதிவளர் தமிழ்மாறர்
பெருவிற் பனமனை'ற யமிழ்தைப் பருகிய
பெருமைப் புயலெனு நெடுமாலே.

11. கத்து கடல்சூழ் புலியின்வசைக் .
கண்டா கருணன் முனமெதிர்ந்து
செத்த வுடலை நிவேதனஞ்செய்
திறத்துக் குகந்தே யவற்குமவன்
சித்த மூவத்தல் காரணமாத்
தீய தம்பி தனக்குமுயர்
முத்தி கொடுத்த திருவருளே
மூட னேனை யாண்டத்துவே.

12. பத்தி செய்து பகைத்தகண் டாகனன்
பாழி வெள்ளிப் பருப்பத வாணனை
முத்தி யெய்த விழைந்து வணங்கவு
முகுந்த னன்றி யுகந்தது வல்லமோ
புத்தி செய்தரி பொங்கரு டங்குமா
புரிக வென்ற புராரி யிடத்துநந்
நத்தி யெய்தி மகப்பெறு மாயமென்
நான்மு கப்பிர மற்கொரு தந்தையே.

13. கூவத்தே வீழ்ந்தசிறு குழவியைநற்
றாயெடுக்கக் குதித்தாற் போலப்
பாவத்தே மனக்கலம்போய்ப் பவக்கடல்வாய்ப்
பட்டாரைப் பரமன் றானே
யாவத்தே யில்லாத பெருவீட்டை
யடைவிப்பா னருளா லிச்சை
மேவத்தே கம்படைத்துத் தோன்றுவனிம்
மெய்யுணர்ந்தோர் வினைதீர்ந் தோரே.

14. காயா மலருங் கருவிளையுங்
காருங் கடலுங் கமழுமெழின்
மாயா மதுசூ தனமுகுந்த
வரமா தவவா மனவெனவா
யோயா தலற்றி யகங்கரைய
யுள்ளே ததும்பி யின்பவெள்ளம்
பாயா வழிந்து வினைக்கோடை.
பாற்று நாளு முளதேயோ.

15. மனை விட்டிலன் மகவிட்டிலன்
வலிவிட்டிலன் மாலே
தனைவிட்டில னிலம்விட்டிலன்
றனம்விட்டில னாசை
தினைவிட்டிலன் வினைவிட்டிலன்
றிருவற்றவ னேனும்
உனைவிட்டில னெனின் மற்றவ
னொளிபெற்றவ னாமே.

16. நின்ன தாகுமால் விண்ணு மண்ணொடும்
நிலைய தாகிய வீடு மேயெனின்
என்ன தாகயா துள்ள தோதெரி
கிற்கிலே னுடற் சென்ன மோடுயிர்
உன்ன தாகலா னிற்கு நல்குதற்
கொன்று மில்லையா னேழை யேனுமென்
தன்ன தாகவென் கையி லுள்ளதஞ்
சலிநி னாதுகை தனிலி லாததே.

17. நெய்யிற் றனியே யெரியாத
நெருப்புத் திரியின் மிசையதையே
பெய்யிற் சுடர்விட் டொளிகிளரும்
பெற்றி யேய்ப்ப மலவுயிரை

மெய்யிற் புகுவித் திரண்டனையு
மேவிப் பொலியும் விழுச்சுடர்நீ
கையிற் கனிபோற் காட்டினல்லாற்
காணா தெவர்க்கு மகக்கண்ணே.

18. காமாந்த காரமடுக் காரிகையார் வேட்கைக்
கராவாயிற் கண்ணிழந்து கன்மனவெங்
றேமாந்து வீழ்ந்துகரை யேறவலி யில்லா [களிறொன்
தெந்தையுனை யுன்னாது நொந்தழிவ தருள்வாய்
பூமாந்து வண்டுலவு பொய்கையிடைப் புக்குப்
போற்றுகரி காத்ததினு மேற்றமிதற் குண்டால்
தீமாந்து மெழுகுபொரத் தினமுருகு மன்பர்
சிந்தைகுடி கொண்டிருலகு முந்தைமுழு முதலே.

19. பாபத்தாற் காழ்த்தறிவு
பாழ்த்ததனான் வெளிறியடுங்
கோபத்தாற் சிவப்புற்றுக்
கொடுஞ்செருக்கா னனியிருண்டே
யாபத்தா னிளைப்பெய்தி
யழுக்காற்றாற் றடிக்குமனம்
சாபத்தேற் குயிர்ப்பிணியாய்த்
தழைப்பதுகாண் டனிமுதலே.

20. பழுவிருக்கத் தோல்வேய்ந்த பாவை நெஞ்சப்
பாம்பிருக்கும் பாழ்ங்குடங்கர் பற்பல் கோடிப்
புழுவிருக்கப் போர்த்தமலப் பொதியே யைந்து
புலப்பேய்கள் குடியிருக்கும் புக்கில் புண்ணாய்
குழுவிருக்கத் தொக்கமுடை யிரைமெய் யென்று
குறித்திருக்கப் பெற்றபெருங் குணத்தோர்க்
கெழுவிருக்க மொருகணையா னெய்து பத்த [கல்லா
ரெழுபிறப்பு மறுப்பவனை யேத்த லாமே.

21. பணவாசைப் பேய்கண் டுயிலவிடா
தெனைப் பாவையராம்
பிணவாசைப் பூதங் கனவும்
புகுந்து பிடித்துடற்று
முணவாசைக் கூளியெஞ் ஞான்றுந்
தெறுமிவைக் கோய்வுமுண்டோ
குணவாசைப் பானுவைப் போன்றுள
னோங்கென் குலதெய்வமே.

22. பொன்னினைக்கும் புகழ்நினைக்கும்
பூமியெலா நினைக்கும்
பூணினைக்கு மூணினைக்கும்
பூவைமொழி யாரை
மன்னினைக்குந் தன்னினைக்கும்
மற்றையர்க்குத் தீது
வரநினைக்கும் பழிமறைக்கும்
வழிநினைக்குந் துன்ன
தின்னினைக்கு நென்னினைக்கு
மிருள்புகுத்த வல்ல
தெதுநினைக்க வென்றாலு
மதுநினைக்கு நெஞ்ச
நின்னினைக்க லாகாது
நீநினைத்தல் வேண்டு
நீடொளிய சேடகிரி
நின்றபெரு மானே.

23. மாட்டாலு மயக்காலு மகிழாலும்
புகழாலும் வாட்கண் மாதர்
கூட்டாலு முணவாலுங் குடியாக்கொண்
மடியாலுங் கோபத் தாலும்
பீட்டாலு மழுக்காற்றுப் பேயாலு
நாயேன்செய் பிழைக ளெல்லாம்
பாட்டாலு நிரம்பாது கேட்டாலும்
பாவமெனப் பகர்வ ரெந்தாய்.

24. ஏழாலே யனந்திட்ட புன்பிறப்பி
னெத்துணைக்கோ வினைவே னெந்தாய்
ஊழாலே யொருகோடி யுடலாலே
புரைடாலே யுடறுங் காமப்
பாழாலே சூழாலே பகையாலே
பசியாலே பயத்தாற் பாவச்
சாழாலே திணிந்தமனக் கல்லாலே
படுவவெலாங் கணிக்க லாமே.

25. சற்றேனு மிரங்கீரோ வெனப்பசித்தார்
தழங்குரைமுன் றலைக்கேட் டோர்கைத்
துற்றேனு மீவறியாச் சுமடனேன்
சுடும்வறுமை தொலையத் தம்மை
விற்றேனு முதவுகொடை வீரர்முன
மென்னாவேன் வியாள மேய
புற்றேனு மொவ்வாவென் புல்லுடலே
புவியினெடும் பொறையா மெந்தாய்.

26. அருகிருக்கும் புல்லாணி யமர்ந்திருக்கும்
வில்லாளிக் கன்பு பூண்டு
பெருகிருக்கு முறையானே பேசறியே
னந்தணரிற் பிறந்தேன் வாளா
முருகிருக்குங் குழலார்க்கு முனைந்திருக்குங்
காமத்தீ மூள நாளும்
வெருகிருக்கு மாறிருளை விழைந்திருக்கும்
வெய்யனருண் மேவ லுண்டே.

27. அனைபடைத்த வுயிர்க்கெல்லா மயன்படைத்த
தில்லையுட லடியார்க் காக்க
முனைபடைத்த வறவாழி முதல்வனடி
முளரியினை முன்னு மெண்ணந்

தினைபடைக்க மாட்டாது தீநரகு
படைப்பார்தாஞ் செய்த முன்னை
வினைபடைத்த தல்லாது வேறுண்டோ
மெய்யுணர்ந்து விள்ளுங் காலே.

28. குழலோம்பு மினியவிசைக் குயிலோம்பு
குரன்மடவார் கொடிய காமத்
தழலோம்பி யேயபணி தலையோம்பிப்
பெற்றவற்ப சார மென்னும்
விழலோம்பி யதனானோய் மிகவோம்பி
மெலிவெல்லாம் வீடாண் மாயன்
கழலோம்பு மாறறியாக் கசடோம்பி
நின்றவெய்ய காட்சி யாமே.

29. பாடுபட்டுத் தேறிநிதிப் பரப்பு நாளும்
பகைவிளைக்கு நிலனும்பெண் பாலார் கொங்கைக்
கோடுபட்டுச் சிதைந்த புலவுடம்பும் வாழ்நாள்
குறைபட்டுப் போம்வழிக்குத் துணையோ
[சொல்லாய்
காடுபட்டுப் போகாமே காக்குங் கார்போற்
கருணைமழை பொழிகின்ற கமலக் கண்ணற்
கீடுபட்டு வீடுபெற்று வாழ வெண்ணா
திரும்பிறவிக் கடற்பட்ட வேழை நெஞ்சே.

30. எல்லணைத்த பிறைபோலு மெழிலணைத்த
திருநுதலா ரிரண்டு கொங்கைக்
கல்லணைத்துக் கண்டசுகங் கனவணைத்த
கனிசுவைத்த காட்சித் தென்று
வில்லணைத்து நீலமுகின் மிளிர்பச்சைப்
பாயன்மிசை மேயி னாற்போற்
புல்லணைக்கட் சாய்ந்தவன்பேர் புகன்றிருப்பார்
பேர்புகன்று புகுவர் வீடே

31. மலைபோ னிதியு மனுவா மதித்து வறுமைகொளுங்
கலையோ துளியுங் கடலா நினைத்துக் கருவமுறு
நிலையோ பெறாது நரகு படைக்கின்ற
[நெஞ்சிற்கியான்
விலையோ வருளு மிலையோ வடமலை மேலவனே.

32. குடிபிடிக்கு மானப்பேய் குலம்பிடிக்கு
மகங்காரக் கூளி யோடு
செடிபிடிக்கும் பேராசைச் செந்நாயு
மனக்குரங்குந் தினமு மென்னை
மடிபிடிக்கும் விடியலும் வழிமறிக்கு
நரகநெறி வருக்கு முன்னை
யடிபிடிக்க வொட்டாவவ் வல்லலெலாம்
வெல்லவரு ளரங்கத் தெந்தாய்.

33. பாட்டா னளிகண் முரலுமெழிற்
பங்கே ருகத்தின் மிசையமர்ந்து
கூட்டா ரெகினம் பெடைதிளைக்குந்
துறைசேர் மல்லி வளநாடி
தாட்டா மரைப்போ துளப்போதிற்
றணவார் பிறவிச் சலதிபட
மாட்டார் முடிப்போ தவாவுமுதல்
வன்றாட் பிணைந் தெடுத்தலினே.

34. குலையெடுத்த மரக்கொம்பிற் குதித்துத் தாவுங்
குரங்கனைத்து நீமுன்னர்க் குறித்த வாறே
மலையெடுத்து மலைகடந்தும் வாழ்ந்த வென்றன்
மனக்குரங்கு மட்டுமுனை வணங்க லில்லாத்
தலையெடுத்து நிமிர்ந்திருளின் வீழ்த லெல்லாந்
தயாவுளத்திற் குறியாத தன்மை யென்னோ
சிலையெடுத்த நீலமுகில் போற்புல் லாணித்
திருப்பதியின் மேவிவளர் தேவ தேவே,

35\. செகத்துக்க ணவதரிக்குந் தெய்வதச்சீர்
கேட்டுரையாச் செவிட்டு மூங்கை
முகத்துக்கண் விழித்திருக்க வகத்துக்கண்
குருடுபட்ட மூட னல்லா
லிகத்துக்கண் வாழ்வனைத்து மிருங்கான
னீரனைத்தென் றெண்ணா தேபெண்
அகத்துக்கண் வந்துழல வாழ்நரக
மமிழப்போ மாதன் யானே.

36\. மருவேட்ட குழலார்க்கு மனம்வேட்ட
மயலானே வையத் தென்றுங்
கருவேட்ட விடர்க்கடலிற் கரைவேட்ட
வுடைகலம்போற் கவிழ்கின் றேற்குச்
செருவேட்ட தென்னிலங்கை தீவேட்டஞ்
செயம்பொருத செல்வன் கஞ்சத்
திருவேட்ட முழுமுதல்வன் சீர்வேட்ட
சேவடியே சேம மாமே.

37\. ஆற்றைக் [illegible]
[illegible] விரைய [illegible]
[illegible]
மாட்ட விரையு [illegible]
றூற்றைக் களைந்து வேர றுக்கத்
துகடீ ரருள்வா டருவைகொலோ
சேற்றைக் கழுவ முடையளறு
திளைப்பேற் கொருநாட் டிருமாலே.

38\. தெருளாசைப் பட்டறிந்து செங்கண்மால்
சேவடிக்கே சேர்ந்த நெஞ்சா
லருளாசைப் பட்டிருக்கு மடியார்முன்
செடிநாயே னவனி மீது

பொருளாசைப் பட்டிவறிப் புன்பழியே
நணியீட்டிப் பொருகண் மானார்
மருளாசைப் பட்டதனா னிருளாசைப்
பட்டெய்த வதிகின் றேனே.

39. கறையடிக்குள் வெதுப்பொழியக் கலுழன்மிசைக்
கார்மழைபோற் கடிது போந்த
விறையடிக்குத் தினையுருகா விரும்புமன
மெமனெனும்பேர் யார்சொற் றாலும்
மறைபடிக்கும் பதைபததைக்கும் பல்கோடி
நினைநினைந்து பரிவு கூரு
மறையடிக்கு முடிக்குமிக வழுத்துமரி
யெழுத்துமெண்ண மாட்டா தந்தோ.

40. தேகநிலை யாதநிலை செத்தபிண மோதுஞ்
செல்வநிலை யாதபடி சொல்வரிர வாளர்
போகநிலை யாமைவலி போமுதுமை கூறும்
புத்திநிலை யாதமுறை பித்தர்மொழி வாரான்
மோகநிலை யாமைசொல மூடமன முண்டு
முற்றுநிலை யாமைமறை கற்றவர்கள் சொல்வார்
சோகநிலை யாதநிலை சொல்லியருள் வாரார்
சோலைமலை மேவிவளர் நீலநெடு மாலே.

41. முடியிருக்கு நெடுமாலுக் கடிமைசெய
முயலாத மூட மூர்க்கச்
செடியிருக்கு மனக்குரங்கு குடியிருக்கு
முடையாக்கை சிதையா தேயிப்
படியிருக்கு மெனநினைக்கும் பாமரர்க்குச்
செத்தபிணம் பறையாற் சாற்றி
நொடியிருக்கு மெனக்கருதீர் நுமக்குமிது
வழியென்று நுவலு மாலோ.

42. குகைகண்டு தனியிருந்து குலதெய்வம்
வரானாக்காக் குருட்டு நெஞ்சாற்
பகைகண்டு சினந்துமுறு பணங்கண்டு
விழைந்தும்விழிப் பான லார்புன்
னகைகண்டு மருண்டுமவர் நடங்கண்டு
வியந்துமொழி நாள்க ளெல்லாந்
தொகைகண்டு துறவார்க்குச் சுடுகாட்டிற்
புகைகண்டு சொல்லு மெய்யே.

43. மறிகேட்டு வாங்கியதை மலைக்கடவுட் கென்று
வதைத்திட்டுக் கொலைபடைத்து வருள்படைத்த
[வேலன்
குறிகேட்டுக் களியாட்டுக் குணக்கூத்து மாடிக்
கும்பிட்டுப் பெற்றபயன் றன்பத்தின் வேறோ
செறிகேட்டுப் பவக்கடலிற் றிரையிடர்க்கு நொந்து
தீவினைக் கராவாயிற் சிக்குவது தீர்ந்து
நெறிகேட்டுப் பெருவீட்டி னிலைத்தினிது வாழ
நீர்நினைதி ராயினரி பேர்நினைதிர் மாதோ.

44. தீவினைப் பெருக்காற் பொருடனைப் பெருக்கிச்
சிறுபுகழ்க் கொருசில விடுவீர்
கோவினைத் தொலைத்துச் செருப்பினைக் கொடுக்குங்
கொள்கைநுங் கொள்கையே யம்மா
காவினைச் சயித்த கொடையினா லடியர்
கருதிய தன்னையு மளிக்குந்
தேவினைப் பழிச்சி யாவையுங் கழித்துச்
சிறப்பினை யுறப்பெறா தீரே.

45. மாகனக மேருவென நிதியி ருந்தென்
மகிழ்பெண்டிர் மக்களொடு வாழ்விருந்தென்
றேகநக மெனவிருந்தென் றெளிந்த தாலென்
செகமுழுது மடிமைபுகுஞ் செயத்தி னாலென்

போகநக ராதிபதி யாயி னாலென்
பொல்லாத விரணியரா வணர்போன் மாள்வர்
கோகனக மலர்ந்தருணீர் கோத்த கொண்டல்
கோதண்ட கோளரியைக் கூறா தோரே.

46. திரவியமொன் றுறுமாயிற் றிரைமேற் செல்வர்
தீமலையின் மிசைச்சேர்வர் சீயந் துஞ்சா
திரவியல்வெங் கான்சுரம்போ யிளைப்பர் வையத்
தினைப்பிளந்து பாதாளத் திடையும் பார்ப்பர்
உரவியகார் வானத்தும் பறப்பர் பூத
மொன்றுக்கு மஞ்சார்த முயிரு மாய்ப்பர்
விரவியவிவ் வினையினொரு தினையும் தெய்வ
விழுப்பொருளைப் பெறப்புரிய விழைவோர்
[யாரே.

47. அன்புருக்கொ ளசோதைத்தாய்க் கெளிய னாகி
யழனுருக்கொள் வஞ்சத்தாய்க் கெமனே யாகித்
துன்புருக்கொள் பொருகளிற்றை மாய்த்துத் தூய
தொழுகளிற்றைத் துயர்தீர்த்துத் துகடீ ருள்ளத்
தின்புருக்கொள் சேடன்மிசை யினிது சாய்ந்தன்
றிடருருக்கொள் காளியனை யடர்த்த லானே
வன்புருக்கொள் கொடியார்க்கு மடியா ருக்கு
மன்னிறைவ னருண்முறைமை மதிக்க லாமே.

48. கங்கைக் கரைக்குக் குகப்பெருமான்
கருதும் பம்பைக் கரைக்கநுமான்
சங்கக் கடலின் பெருங்கரைக்குச்
சார்ந்த வொருவீ டணனிவரைப்
பங்கத் துறையும் பள்ளநிலம்
பாயும் புனல்போற் கலந்தவிறை
துங்கத் தினிய திருவருளே
தொலையாப் புணையாந் துயர்க்கடற்கே.

49. ஓலை கட்டித் தூதேகிப் பாண்டவர்க்கா
ஹூரிரந்தா னுவந்து சாத்த
மாலைகட்டிக் கருள்புரிந்தான் மண்ணினுற்றார்
புண்ணியத்தின் வாழச் சேது
வேலைகட்டி வைத்தபிரா னருட்கடலிற்
குளித்தற்கு விரகி லாமே
சேலைகட்டி விழிவலைக்கொள் தெரிவையர்கா
தலின்மூழ்குஞ் சிதடன் யானே.

50. பிரமனைமுன் படைத்தவற்குப் பெருமறையைப்
பிறக்குவித்த பிரம மென்றே
பரமனைமுன் றுதிக்கறியாப் பாழ்ம்பிறப்பு
மானிடமாய்ப் பார்க்கப் பட்ட
கரமனைத்துக் கழுகனைத்துக் கழுதனைத்துக்
கல்லனைத்துக் கனியு நஞ்சா
மரமனைத்தென் றெண்ணிவிடா மதியுடையேற்
குவமையிந்த வையத் துண்டே.

51. தனக்குமே லொருவருள ரெனவெறுக்குஞ்
சழக்குயிரின் மமதையினைச் சாற்றி னுற்றா
ருனக்குமேற் கடவளுள னென்ற போதும்
உருத்தவரைக் கொலைசூழு முதற்குச் சான்று
சினக்குமே லுலகமெலா நடுங்கா நிற்குந்
தீயவிர ணியனென்று தெளிவா ரன்னா
னெனக்குமே லில்லையென வகங்கரிப்பி
னெல்லையினின் றேற்கிறைவ வென்செய் வாயே.

52. முற்றத் துறந்த முனிவரரு
முதல்வா நின்பான் முறையிட்டுச்
செற்றக் காம மயக்கமெலாந்
தீரு மாறு வரங்கிடப்பக்

குற்றக் கலமா யுளவடியேன்
குறைவேண் டுவது முறையோதான்
தெற்றத் தெளிந்த சடகோபர்
தெவிட்டா தருந்துந் தெள்ளமுதே.

53. அரனைப் படைக்குந் திசைமுகனை
யலரிற் படைக்குந் திருநாபி
வரனைப் படைக்கு மனப்பெரியார்
மலர்ந்த செழுந்தா மரைப்பதத்துச்
சிரனைப் படைக்க மாட்டாத
தேகம் படைக்குந் தீயவினை
மரனைப் படைத்து வளர்க்கின்ற
மதியைப் படைத்தேற் கருளுளதோ.

54. காலமெலாங் கணிகையரிற் கழித்து மூத்த
காரிகையாள் காந்தனைப்பின் காண லுற்றுச்
சீலமெலாஞ் சிறந்தகுணத் தெரிவை யொப்பச்
செய்தபிழை பொறுக்கவென்று செப்பல் போல
வாலமெலாந் திரண்டனையே னந்தோ வாசைக்
காளாகி நாடொலைத்தே னன்ப ரேய்ப்ப
வோலமெலா மிடுகின்றே னிதற்கு நீயு
முற்றருள்வை யோவறியேன் பெற்ற தேவே.

55. கிளையெலா நச்சுக் கனிபழுத் திருக்குங்
கெட்டதீ மரத்தையும் வித்து
முளையெலாங் கெடுத்துப் புனலெலாம் வீணாய்
முடித்துநல் லெருவெலாந் தீத்துக்
களையெலாம் விளைக்குங் களரையு மனையேன்
காண்பனோ நின்னையு மாயர்
அளையெலா மடிய ரன்புபோ லருந்து
மய்யனே தெய்வநா யகனே.

56. மறப்பினுக்கோ ரறையாகு மையிருட்டுச்
சிறையாகு மயற்கூ டாகும்
இறப்பினுக்கும் பிறப்பினுக்கும் படியாகும்
நரகினுக்கோ ரேணி யாகுந்
துறப்பினுக்குப் பகையாகுந் துர்க்குணத்துக்
குறவாகுந் துகடீ ரெந்தாய்
சிறப்பினுக்குச் செல்லாது செய்சுவராந்
தீமனமென் செயத்தந் தாயே.

57. ஒழுக்கினா னீத்த வுயர்முனி வரரு
முள்ளழுக் கறவுனை யுள்வா
ரிழுக்கினா னளறே யெனுங்குடும் பத்தோ
டிரண்டறப் பொருந்தழுக் கிருநீர்
முழுக்கினாற் போமோ வுன்றிரு வருளின்
மூழ்கினா னல்லது வினையைப்
புழுக்கினான் முளைக்கா வித்தெனப் புரிந்து
போற்றினார்க் காற்றுமா தவனே.

58. உடலிந்தே யிடரினுக்கொன் றுன்ன லெல்லா
முரலிருந்தே யுலக்கையினுக் கஞ்சல் போலாங்
குடலிருந்த தொடக்கறுத்துக் கோத்த சுற்றக்
கொடும்பாசப் பிணிப்பவிழ்த்துக் கொண்ட
மடலிருந்த பெரும்பேயி னாசை யோட்டி [பெண்ட
யகப்பற்றும் புறப்பற்று மனைத்தும் வீட்டி
மடலிருந்த துளவலங்கன் மாயன் றூய
மலரடிக்கீழ்ப் புக்கொடுங்கா மடமை நெஞ்சே.

59. சரிந்தகுழ றாங்கியதண் கரமும் பற்றத்
தளர்ந்தவுடை பிடித்தமலர்க் கரமும் விட்டுத்
தெரிந்தவுளத் தொளிர்கின்ற தேவே யுன்னைத்
தேர்ந்தொருகாற் கூப்புதலைச் செய்யும் போழ்தே

விரிந்தகுணப் பாண்டவர்தம் வென்றி போல
விளங்குதவக் கொடிமான மெய்யே காத்துப்
புரிந்தபெரும் பாரதமும் போதா தென்று
புலம்பியதுன் றிருவருளின் பொலிவே யம்மா.

60. துட்டவிரா வணனார்வாற் சுடுகென் றோதத்
துணைந்தெழுந்து புகுந்துன்பாற் றொழுது நியர்
கிட்டவிரா முழுமுதலே சரண மென்று
கிளந்திரங்கும் வீடணனைத் தீய னென்னப்
பட்டவிராக் கதன்றம்பி நம்பாற் கொள்ளப்
படாதென்ற கவிவேந்தை மறுத்து நல்கி
யுட்டவிரா வன்பின்வரி னிராவ ணற்கு
முற்றபய மளிப்பலென்ற வுரையே தஞ்சம்.

61. பிரமாண்ட கோடியெலாம் பெற்றுக் காக்கும்
பிரமநீ யவரித்த பெற்றி தேறா
துரமாண்ட கவியனைத்து முவரிக் கூலத்
துறுகணுனக் கெய்தாமை யளிக்க வோர்ந்து
கரமாண்ட வால்பிணைத்துக் கவிந்து கொண்டு
கடிமதில்போ னின்றிளைப்பாற் கண்க டுஞ்சச்
சரமாண்ட வில்லினொடுந் தம்பி யோடுந்
தாண்டியவை காத்தவரு டமியேன் றஞ்சம்.

62. திசைக்கும் வெப்ப வினைத்துய ரைத்தெறு
திடத்த வச்ச வரிப்பெ ணருத்திய
திருக்க ணிக்கு மணித்துணை கட்டிய
செவிக்க சட்ட னளித்த முடைச்சவத்
தசைக்கு மற்பி னுருக்கொ ளுளத்தருள்
தழைத்த பத்த ருடற்புள கத்தொடு
குழற்க ணுற்ற வரக்கை நிகர்த்துளன்
தனித்து ருக்க முறத்தமி ழிற்பொழி

யிசைக்கும் வெற்றி யுருக்கு மிணிக்குயி
லெழிற்கை பற்றி யதற்கு வெறுத்தர
வெனக்கொ தித்த செருக்க னிடைக்குலத்
திலச்சை யற்ற சழக்க னெனச்சொலும்
வசைக்கு முத்தி கொடுத்து மறைச்சிரம்
வழுத்த நிற்கு மடிப்பது மத்தலான்
மனத்தை வைக்க நினைப்பகொல் கற்றவர்
மயக்க மிக்க பவக்கடல் வற்றவே.

63. விதுவைத்த தலைச்சிவ னுக்குமலர்
மிசைவைத்த மறைந்பிர மற்குமிறை
புதுவைத்தல முற்றமு துக்குறைவி
புனைபுத்தமிழ் தத்தமி ழிற்குமுடி
மதுவைத்த விதழ்த்தொடை யற்குமகிழ்
மனம்வைத்து மணத்தைய ளித்தபுயல்
பொதுவைத்த நிதிக்கு நிகர்த்தவருள்
பொழியத் தழைகிற்பது முற்றுமரோ.

64. சேப்படைத்த சிவனயனே யெனலான
தெய்வதங்கள் திகழ்மந் தாரக்
காப்படைத்த விந்திரனே தலையாய
தேவர்நரர் கனக மேரு
தேப்படைத்த பலகோடி யண்டமுதற்
பூதமெலாந் திருமால் நாபிப்
பூப்படைத்த தென்றவன்பேர் நாப்படைத்த
பயன்கொள்ளப் புகல்வர் மேலோர்.

65. பரகாலனை முதலாகிய பழையோ ரருளானே
கரவாதுள மறவாதுன கழலேதொழு வேனே
நரநாரணை வரிவாமன நளினாசனி நாதா
வரகாரண சகன்மோகன மதுசூதன மாலே.

66. துருவ னுக்குயர் நிலைகொடுத்தன
துருப தைக்கவிழ் துகில்வ ளர்த்தன
சுமுக னுக்குள பயமொ ழித்தன வுலகாளும்
ஒருவ னுக்கெழில் வளைத ரித்தன
வுரைக ரிக்குயர் கதிப டைத்தன
வுலம ழைக்கொருமலையெ டுத்தன
வுமைகேளவன்
சருவ னுக்கிர வொழிய விட்டன
தசமு கற்கடு கணைதொ டுத்தன
சகல ருக்குநல் வரம்வி ளைப்பன வடிநீழன்
மருவெ னக்கிக பரம ளிப்பன
வடம லைக்குறு கடவு ணற்பொல
வரையெ னத்தரு தருவெ னப்படு
புயமாதோ.

67. முறைக டந்து பிறர்ம டந்தை
முலைபு ணர்ந்த பழுதெலாந்
தறைகி டந்து புனல்ப டிந்து
தழலி னின்று மொழியுமோ
சிறைகி டந்த செனனம் விஞ்சி
நரகு ழந்து தவிருமோ
மறைக டந்த வரமு குந்த
மனமி ரங்கி யருள்வையே.

68. தானே வழங்க வறியாத
சலவா ரியையுன் றயையினுக்கு
நானே யுவமை நவில்வதையு
நயந்துந் தன்னை நல்கலிலா
வானே வளருங் கற்பகமா
மரத்தை நினக்கொப் புரைப்பதையுங்
கோனே நினையுந் தொறுமெனது
கொடிய மனமுங் குலைவுறுமே.

69. மாறு பட்டுரிய கொழுந னுக்கியைய
வாழ்த லற்றுமயல் மனைகளில்
வயிறு பட்டபசி தணிய லுற்றுவினை
வழியி யற்றிவரு கூலிகொண்
டூறு பட்டசிறு நிலையி னிற்குமவ
ளொருவ னுக்கெனமுன் னாளினி
லுடைமை பட்டுமண முடிய லுற்றதனை
யுணர்வின் வைத்துநிறை தன்மனம்
வேறு பட்டிலளு மாகி மற்றெதையும்
விழைத லற்றவளு மாயினால்
மெலியு மத்தெரிவை குணனை மெச்சிவரன்
மேவு காலமுள தாகுமால்
தூறு பட்டவினை யேனு னக்கடிமை
தொடர்வி விட்டுமுனை யல்லது
தொழுநி னைத்தவனு மிலையெ னத்தெரிவை
துளவு தொட்டமுடி மாயனே.

70. தாயிருந்தும் முலையினிற்பால் தழைத்திருந்துந்
தரைக்கிடக்குந் தருணந் தானே
வாயருந்த மாட்டாத மகவினுக்கு
வாயின்முலை மடுக்குந் தாய்போல்
நீயிருந்து நின்கணருள் நிறைந்திருந்தும்
யானருந்தா நிலைகண் டென்கண்
மேயிருந்து நீயூட்டா வெனின்மெலிவேன்
வசையுநினை மேவு மெந்தாய்.

71. அனும னுக்கு நளிர்க வெனச்சொலி
யழலின் வெப்ப மகற்றி யளித்தவள்
அடல ரக்கர் சிறையை யறுப்பதற்
கனுமு யற்சியு முற்றில ளற்றென
முனும யற்கு முதுமறை சொற்றவன்
முழுது யிர்க்கு முலகு படைத்தவன்
முதிரி ருட்கொர் பரிதி யளித்தவன்
முகிலி டர்க்கு மலைமயை யெடுத்தவன்

தனுவெ வைக்கும் நிறுவி வளர்ப்பவன்
தனய ருக்குண் முலையை யமைப்பவன்
தழை பயிர்க்கு மழையை விடுப்பவன்
தரணி துக்க மொழிய வுதிப்பவன்
இனும னுக்கு கொடிய பவக்கடல்
இழிய வைப்ப னெடுப்ப னெனக்கவன்
எழின்மி குத்த வருளின் முறைப்படி
இனிதி ருப்பதை யல்லது மொல்லுமே.

72. பொற்றை யுடலைப் புறங்கழுவிப்
பொழுதே புசித்துப் புனையரவப்
புற்றை விழைந்து புணர்ந்துறங்கும்
புன்மை யலது புவியினிடை
மற்றை யெதுவு மின்பமென
மதியேன் பரமா வுனைத்துதியேன்
இற்றை நாளுன் னடியெண்ணி
யிருப்பேற் கென்னீ யெண்ணுவதே.

73. கரியுந் திருவீ டணனுமடற்
காகா சுரனுந் துருபதையும்
பரியு மிடரா னுளநடுங்கிப்
பகவ னுனையே பற்றியபோ
துரிய தூய்மை முறைபுரிய
வுணர்ந்து மிலரா லன்னவர்க்கு
விரியு மரிய பெருங்கருணை
வினையேன் தனக்கு முளதாமே.

74. பாந்தண் மணிவாய் விடமருத்திப்
படரு மழலி னிடைவீழ்த்திப்
படையி னறுத்து மலையுருட்டிப்
பதைக்க வதைக்கும் படிபுரிந்துந்

தேந்தண் டுளவத் தொடைகமழுஞ்
செழுந்தாண் மலரி னழுந்துமனந்
திறம்பாச் சிறுவன் மொழிகாக்கத்
திருத்தூ ணுதித்துத் தனைக்குவிக்குங்
காந்தண் மெலியும் விரற்கரத்தான்
கருத்தோன் றிடங்காண் டலைவேட்டுக்
கனக னுரங்கீண் டுடற்றொடக்காற்
கரிய குடரு மெடுத்தணிந்து
பூந்தண் மாரி சுரருவந்து
பொழிய வெல்லா வுயிர்க்குமளி
பொங்கி வழியுஞ் சிங்கப்பிரான்
புகழே நினைவேற் கிகழ்வுளதோ

75. எல்லா வுயிரு மெம்பெருமாற்
கினிய வுடலா யிருக்குமுடல்
பொல்லா தொருநோ யுறினதனைப்
போக்க முயற லுயிர்க்கன்றித்
கல்லா வுடற்கு முளதாமோ
கடவுள் கழற்கே யறத்தீர்ந்த
நல்லார் தமக்குத் தாமுயலார்
நங்கோ னருளி னடப்பாரே.

76. நம்பிரான் காளிங்க நடன மாடி
நயந்ததனை யநுகரிக்க நயந்தார் தம்மு
ளெம்பிரான் றிருவேட மியைந்தா டன்னி
னிருங்காளி யன்வடிவ மெய்தி னாளே
அம்பிரா னடிக்கமலஞ் சிரமேற் றாங்கு
மருமையினாற் பெருமைமிகப் படைத்தா [ளன்னாள்
வெம்பிரா மனம்பழுத்த விழுத்த பத்தி
வினையேற்குத் தினையேனு மேவு மேயோ.

77 வாள்பிடித்த கண்ணியர்தம் மயற்பேயின்
பேழ்வாயின் மயங்கி வீழ்ந்து
தேள்பிடித்த கரப்பினுருச் சிதைவேற்குச்
சேண்முழுதுஞ் சென்று தாஅய
தாள்பிடித்து வழுத்தவிடாக் கோள்பிடித்
சழக்குவிதி தணப்ப தெந்த
நாள்பிடித்து நண்ணுறுமோ நண்ணாது
நரகிலெனை நாட்டு மேயோ.

78. ஆசையெலாம் புகவல்ல மனமீ காம
னல்வழியிற் செலவுய்க்கு மாக்கை நாவாய்
மாசையெலாம் பண்டமெனச் சுமந்தவாவாம்
வன்காற்றான் மறுகுபவ வாரி யோடத்
தேசையெலா மிழந்ததன்கண் வினையை யீட்டச்
சிறுநாய்க னெனநாயேன் செறிந்தேன் கண்டா
ரோசையெலா மிடவெமனாம் பாறை தாக்கி
யுடையும்போ தென்னாவே னுடைய தேவே.

79. தாழியி னுக்குமுயர் வீடுகொ டுத்தமுதல்
தாமரை யுற்றதிரு மாமக ளுக்கழகன்
வேழம ழைக்குமுன மேவிய ளித்தவரன்
வேதமு தற்கலைகள் யாவுமு யிர்த்தபரன்
ஏழும ரத்தினையு மூடுரு வச்சிலையின்
ஏவை விடுத்தபுய வீரடி யைப்பிடியார்
ஆழும் வினைப்பிறவி யாகு மிடர்க்கடலில்
ஆவி திகைக்கவுழல் வாரிது சத்தியமே.

80. ஒருகூற னுமைகேள்வ னொளிர்நாபி
யுறையாதி மறைவாண னொடுமாதவர்
புருகூதன் முதலாய சுரர்யாரு
மறியாத பொருளாய தனிமாமுதல்

குருகூரர் பரகாலர் குளிர்கோதை
யதிராசர் வரயோகி குருதாள்களின்
முருகூரு நறைவீசு தமிழோத
வெனையாள முனமேசெய் தவமேதரோ.

81. எய்தாலும் வால்குழைக்கு மிருஞ்சுணங்கன்
பெருங்குண னு மில்லே னின்றேன்
பெய்தாலுங் கைப்பறாப் பேய்ச்சுரைக்காய்
போல்கின்றேன் பெருநா றம்மேற்
செய்தாலு மீவறியார்ச் செல்வர்கடைக்
குழன்றிடர்கொ டீய னேற்கு
வைதாலும் வீடளிக்கு மால்பதத்தை
முடிசூடி வழுத்த லாமே.

82. தூய நீயுயிர் யாவும் வீடு
துலங்கு மாறருள் செய்யினுஞ்
சுத்த சத்துவ ருக்க லாதொரு
துட்ட னேற்கது கிட்டுமோ
தீய ராவண னேனு நம்மொடு
சேர்க வென்ற தினத்திலே
சீல வீடண னன்றி மற்றெவர்
தேவ நின்னடி சூடினார்
பாய மாமுகி லேழும் வாழிய
பாரி லேமழை பெய்யினும்
பைந்த ருக்குல மல்ல தங்குள
பட்ட தாருத ழைக்குமே
ஆய யாவ முண்ண நல்குறு
மன்ன சாலையு ளாயினும்
அறப்ப சித்தவ ரன்றியேவ
ரருந்தி யின்புறு வாரரோ.

83. நீழலொன்று மிலாதபாலை
நெஞ்சு ரத்தி னிருந்ததோர்
நிறைகுழைத்தரு வடிய டுத்தவர்
நெடுவெயிற்றுயர் தீர்பபோற்
கேழ லென்றொரு ஞானமேனி
கிளர்ந்து கொண்டுல கங்களைக்
கீறு வெண்பிறை மாறமைந்தொளிர்
கேடில் கொம்பிடை யேந்தினார்
வீழ லென்றும் விழாமை யென்றுமிம்
மேதினிக்கண் மிடைந்ததீ
வினைநருங்கெடு குணமெனுங்கறை
விரவு றாம லிருப்பரால்
தாழ லொன்றுமி லாது போயவர்
தாளடைந்தவர் யாவருஞ்
சார்கொடும்பவ நோயொழிந்துயர்
தணவி லின்படை வாரரோ.

84. திலத்தளவும் பிறர்க்குதவாத் தீயமன னாலே
சிதலைதின்ற மதலையெனத் தினமெலிந்து [சாய்வேன்
சலத்தையடை தொறும்வேதத் தனிக்கடவு ளுன்னைத்
தயாவிலியென் பேனென்றன் சழக்குவினை [யென்னேன்
நலத்தநெறி நடக்கறியா தடியிழுக்கி வீழ்ந்து
நனிதுயரான் முனிவெய்தி நடுங்குகர மோச்சித்
தலத்தையறை குற்றதளர் நடைப்பருவக் குழவி
தன்மதியென் றுன்மதியிற் சாலவழ கிற்றே.

85. தேனும் பாலுங் கன்னலும்போற்
றெவிட்டாச் சுவைய தீந்தமிழின்
யானும் பாட வல்லனென
ஞாலம் புகழ்த வனிவிருப்போ

வானும் பாரு மளந்தசெந்தா
மரைத்தாள் விருப்போ நீயறிவை
மீனும் பாழி யாமையுமாம்
விமலா நின்சீர் விளம்புதற்கே.

86. தழலை நிகர்த்த துயர்ப்பிறவி
தழைக்கு நிலனா யயன்றிருத்து
மழலை மொழிப்பெண் மயிலனையார்
மயற்பேய் பிடித்த மனக்குரங்குன்
கழலை வழுத்தி யமுதுசுவை
காணா தினிய கரும்பிருக்க
விழலைவளர்க்கு மாத ரைப்போன்
மெலிதல் விதியோ விழுப்பொருளே.

87. விள்ளற் கரிய தொருவீடும்
வேண்டா விறலின் விழுப்பெரியார்
கொள்ளக் குறையாப் பெருங்கருணைக்
குவாலை முகந்து கொளவளிக்கும்
[illegible]
[illegible]
தள்ளப் படுமா லீமம்சைத்
துயங்கு மாலை தனைநிகர்த்தே

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
பவத்தைப் புகுவேன் பரமாயான்
பாவிற் குழல்போ லுழல்வேனோ
தவத்தைப் புகுவார்க் குளதாமுன்
றயைதான் றமியேற் கிலதாமே.

89. நீயிருக்குங் கோயிலென நினையாம
லுடம்பிதனை நெடிய காலம்
பேயிருக்கும் பாழ்மனையிற் பெருங்கேடு
பெறவிகழ்ந்து பிறருக் கச்ச
மாயிருக்குந் தீயவினைத் தூறுமண்டி
யழியவிட்டே னந்தோ சேய்க்குத்
தாயிருக்கு மாறிருக்குந் தடங்கருணைப்
பெருங்கடலே தம்பி ரானே.

90. மூத்த மிரங்கு முறுவனல்லார்
முலைக்கண் மோத முரணழிந்து
நித்த மிரங்கும் வகையுடைந்த
நெஞ்சப் புணையே துணையாய்ப்போய்
நத்த மிரங்கும் பவக்கடலி
னனிமூழ் குவதொன் றல்லாதுன்
சித்த மிரங்கும் படிவேறென்
செயவ லேன்யான் தெய்வதமே.

91. தேறா வொருவன் றெங்கிளநீர்
செவ்வே நிறைந்த தீங்காயைச்
செங்கை வருந்த வசைத்த சைத்துச்
சிறிதுந் தளும்பா வகையோர்ந்து
மாறா மிதுநீ ரிலதென்று
மருண்டு மாந்த முயலாது
வறிதே யிகழ்ந்து விட்டாங்கு
வைய முழுது நிறைந்தெவர்க்கும்
பேறா யருளுக் குருவான
பெருந்தே வூனப் பேய்விழிக்குப்
பிறங்கா வியல்பா னிலையென்று
பேணா திகழ்ந்து பெரும்பிறிதாய்

நீறாய் நிலத்து விளிவேனை
நெடுமாற் கேநீ யடிமையென
நினைவித் தெடுத்தாண் டதுஞான
நிதிபோன் மாற னெறித்தமிழே.

92. நெஞ்ச மென்ற கருங்கல் கொண்டிடர்
நீர வெம்பவ வாரியி
னீடு செல்ல நினைந்து மூழ்குறு
நீச னேனகி லேசனே
தஞ்ச மென்றன னஞ்ச லென்றரு
டந்தி டாயெனி னின்னையே
தந்தை தாய்கதி யென்று வேதம்
விதந்த துந்தவ றாகுமே
கஞ்ச நாண்மல ரந்த ணன்றரு
கங்கை மோலிய னிந்திரர்
காசி லாதப ராச ராதியர்
காண வாசைகொள் சேவடி
வஞ்ச னேனும வாவி னாலது
மாறெ னாநினை வாயெனின்
மாசு ளேற்கென வேறு பாதம்
வகுத்தி லாதென் மாயனே.

93. முழுதுந் தெளிந்து சலனங்கொ ளாது
முதுகுன் றிருந்த சுனையிற்
பழுதின் றிருந்த புனலின்கண் வந்து
படர்திங்க ணீழல் படல்போற்
றொழுதொன் று தூய ருளமீது வந்து
சுடர்கின்ற சோதி யெனையே
கழுதென்று நின்ற கடையே னெனாது
கழறந்து வீடு தருமே.

94. வெருடரும் கூற்ற மேற்றவெந் நரகின்
விழுமமே கெழுமியும் பல்கா
லுருடரும் பிறவி யெனைப்பல கோடி
யுறுவதே பெறுவதாய்ப் பொல்லா
இருடரு ஞாலத் திடரொலா முழந்து
மிம்மியுங் கழிந்திலா தந்தோ
தெருடருந் தேவுன் னருளையு மறிக்குந்
திறக்கதென் தீவினைத் திரளே.

95. வான்மறந்த காலத்தும் வழங்குபுனற்
பேராறு மான நின்னின்
றூன்மறந்த யோகியர்த முளமறந்து
பருகவரு ளொழுகா நிற்ப
நான்மறந்து நாவற்று நலிவெல்லா
முணர்ந்திலையே நற்றாய் பிள்ளை
தான்மறந்துந் தான்மறவா ளெனல்பொய்யோ
தரைகடந்த சரணத் தாயே.

96. உனக்குரிய வருட்கடலிற் றிளைக்கும் போதா
வொருதுளியிற் றுளியெடுத்திங் குரைக்கப் புக்க
தெனக்கினிப்ப தென்னுமந்த வேது வன்றி
யாதுமோர் பயன்கருதி யில்லை கண்டாய்
தனக்கினிக்கு மெனத்தாய்ப்பா லுண்ப தல்லாற்
றன்னுடலம் வளர்ப்பதெனச் சற்றுப் பிள்ளை
மனக்கணினைப் பில்லாத வாறு போல்வேன்
வரத்தவத்த ரமுதமென மடுக்குந் தேவே.

97. மத்தேறு முதலாகப் படாதனபட்
டுயிர்க்கருள வருமாத் தெய்வம்
பித்தேறு மகவுக்கும் பெரிதிடருற்
றுணவருத்தும் பெற்றாண் மான

நத்தேறு திருக்கரத்தான் ஞாலமெலா
நனியூட்டு நன்றி தேறார்
செத்தேறு பாடைமரஞ் செய்பாவ
மென்னென்று செப்பு மாறே.

98. நலத்துளுந் தீங்கே நயக்கும்வெந் தீமை
[illegible]
கலத்துளுங் கயப்பே சுவைக்குறு மியல்பேன்
கண்ணை நின் கோயிலைச் சூழும்
வலத்துளு நின்னை மதித்திடா துலக
வாழ்க்கையே மனக்கொள்வேன் வைகு
நிலத்துளு மினிப்போ நீணர குளும்யா
னெடும்பொறை யாகுவே னம்மா.

99. மையோ மணியோ வெனுமேனி
மாயோ னடித்தா மரைவாழ்த்தி
மெய்யோ புளக மரும்பவுளம்
வெந்தீ மெழுகின் விரைந்துருகக்
கையோ தலைமேற் குவித்தொருகாற்
கண்ணீர் கலுழக் கண்டறியேன்
ஐயோ வவன்ற னருட்பேரா
றருந்த விழைந்தே னழகிதன்றே.

100. எள்ளற் குரிய மனப்பேயார்க்
கேவற் றொழில்செய் திளைப்பேனைக்
கொள்ளக் கருதிற் கொடும்பாவக்
கோட்டை யகத்தேன் குணமிலென்று
தள்ளக் கருதி னவன்றாளே
சரணம் புகுந்தே னிவையிரண்டால்
விள்ளற் கரிய விழுக்கடவுட்
கடியே னிடரே விளைத்தேனே.

101. தாய்வ யிற்றிடை வைத்த தார்கரு
தான ருத்தி வளர்த்ததார்
தலையி னிற்பொறி யிட்ட தார்நல
தரையி னிற்பெற விட்டதார்
பாய்வ யிற்றுயர் போது தாய்முலை
பால்பி லிற்ற விழைத்ததார்
பளக றப்பயி றற்கெ னப்பல
பாடை யைப்புவி நட்டதார்
நோய்வ யிற்புக லுற்ற காலையி
னொய்தெ டுத்து நிறுத்ததார்
நுவலு கக்கடை யுதரம் வைத்துயிர்
நுதலி யற்பொ டணைத்ததார்
நாய்வ யிற்றிகழ் குணமி லேனையும்
நன்னெ றிச்செல வுய்த்ததார்
நான்மு கத்தொரு சேய்படைத்தொளிர்
நாபி மெய்ப்பொரு ளன்றியே.

102. விழிவழியே தெரிகின்ற பேய்த்தேரை
நீரென்று விழைவுற் றாரும்
குழிவழியாய் வழிகுழியாங் குருடருநல்
லொளியரெனக் குறித்துக் கூறப்
பழிவழியே யொழுகியிருட் பாழ்ங்குழியில்
வீழ்கிற்பேன் பரமா நிற்கே
வழிவழியா யுளவடியார் மாந்துதிரு
வருட்காசை வைக்க லாமே.

103. பத்திச் சுவையே பழுத்தமனப்
பகவ ரமுதப் பழம்பாடல்
நத்திச் சுவைதேர் திருச்செவிக்கு
நவில்வார் நாவுங் கயக்கும்வெஞ்சொல்

வித்திச் சுவையே நவையாக
விளைத்த வருத்த மித்தனைக்கு
முத்திச் சுவைநல் கருட்கடவுண்
முனியா யிதுவ முன்னருளே.

104. பிட்டைப் புரிந்த பெருந்தமிழிற்
பிறவா நெறியே நனிகாட்டி
நாட்டைப் புரிந்த தெருட்பெரியார்
நயந்த கடவுட் பத்திமைதான்
கேட்டைப் புரிந்தேற் கணுவேனுங்
கிடையா திவைகொண் டுளதெனின்யான்
பாட்டைப் புரிந்து படிறியற்றிப்
பாரை மயக்கும் பாதகனே.

105. செகத்தைப் புரக்கக் கவித்தமுடி
திருந்த வெழுதித் தேசெழுதேன்
செந்தா மரைக்க ணெழுதியருட்
டேனார் வெள்ளந் தெரித்தெழுதேன்
முகத்தைப் புதுக்கி யெழுதிமணி
முறுவ னிலவை முகிழ்த்தெழுதேன்
மொய்யா ரகல மெழுதிமலர்
முதல்வி கோயின் முடித்தெழுதேன்.

106. அகட்டைப் புனைய வெழுதியுல
கனைத்து மடங்கு மாறெழுதேன்
அணியார் நாபி யெழுதிமறை
யவனார் வரவை யமைத்தெழுதேன்
இகத்தைப் பரத்தை யளிக்குமடி
யெழுதி யெமைக்காப் பதையெழுதேன்
எழுதா மறைக்கு மரியவனை
யெழுதி யேமாந் திருந்தேனே

107. தன்னையே தந்தையெனச் சார்ந்தார்க்கோர்
[தந்தையையும்
பின்னையே நல்காப் பெருங்கடவுள்—முன்னையே
தன்னையே தந்தையெனச் சாரார்க் கநந்தபிதா
என்னையோ நல்கு மியல்பு.

108. கொலைக்களிற்றிற் கொண்ட குளிர்முத்தை யுப்பு
விலைக்குக் கொடுத்த விதமே—நிலைத்ததமிழ்ப்
பாவைப் பிறர்க்குப் பகர்ந்த பிழைதீர
நாவைக் கழுவினே னான்.

109. கற்ற நயித்துருவ காகிபனி ராகவன்யான்.
சொற்ற தமிழ்க்குச் *சுவைதேறார்—உற்ற
ஒருங்குலக மெல்லா மொருவாயி னுண்ட
பெருங்கடவு ளல்லாற் பிற.

---

* "கேள்வியாற் செவிகண்முற்றுந் தோட்டவருணர் வினுண்ணு மமுதத்தின் சுவையாய் நின்றான்" என்பது கம்பநாடர் திருவாக்கு. (இராமாவதாரம். ஆரணிய. சவரிபிறப். 7)

# சீராமநாமப் பாட்டு

1. மதியிருக்குஞ் சடைச்சிவனார் மனைவியினுக்
குபதேசம் வகுத்துக் கங்கை
நதியிருக்குந் தண்காசி நகர்மரிக்கு
முயிர்க்கெல்லா நல்கக் கஞ்சப்
பொதியிருக்கு மறைமுதல்வன் பொறியழித்து
வீடளிக்கும் பொற்பிற் றென்று
விதியிருக்கு முடிவழுத்து மெய்ந்நாமம்
ராமவென விளம்பு வாயே.

2. தாதையார் நாரதற்குத் தந்த நாமம்
தவமுனிவன் வான்மீகி சாற்று நாமம்
மேதையார் ஞானியார்தாம் விள்ளு நாமம்
விபீடணற்குப் பேறருள மிக்க நாமம்
தீதையா ருற்றாலுந் தீர்க்கு நாமம்
தேவரெலாஞ் செபிக்கின்ற தெய்வ நாமம்
சீதையா ருயிர்தளிர்க்கச் செய்த நாமம்
சீராம நாமமெனச் செப்பு வாயே.

3. குருவடிவ வசிட்டன்மகிழ் கூர்ந்த நாமம்
கோசிகனார் வழிபட்டுக் கொண்ட நாமம்
கருவடியிற் புகாநெறியே காட்டு நாமம்
கவந்தனொடு விராதனுயிர் களிக்கு நாமம்
மருவடிய ரெல்லாரும் வாழ்த்து நாமம்
மந்திரங்கட் கரசெனவே வகுத்த நாமம்
திருவடிக்கின் னமுதாத்தித் திக்கு நாமம்
சீராம நாமமெனச் செப்பு வாயே.

4. இகத்துக்கும் பரத்துக்கு மேற்ற நாமம்
* இருக்கனைத்து நாந்தியினி னியம்பு நாமம்
மகத்துக்குப் புகல்கின்ற மகிமை நாமம்
மாதவயோ கியருளத்தே வரைந்த நாமம்
முகத்துக்கின் சுவைத்தாக முளைத்த நாமம்
முன்னொருபுள் சிறைமுளைக்க மொழிந்த நாமம்
செகத்துக்குந் திவியினுக்குஞ் சிறந்த நாமம்
சீராம நாமமெனச் செப்பு வாயே.

5. † உலகினிலெட் டைந்தினுக்கு ளுயிரா நாமம்
உறங்காத வில்லியுளத் துறைந்த நாமம்
பலகலைதேர் சரபங்கர் பன்னு நாமம்
பாயபுகழ்க் கவியரசர் பாடு நாமம்

---

* ராமபத்ரன் விஷயமான 'பத்ரங்கர்ணேபி' என்னுஞ் சுருதியே நாந்தியாதலால் இங்ஙனங் கூறியது.

† எட்டு - திருமந்திரம். ஐந்து - சிவபஞ்சாக்ஷரம்.

இலகலைவாழ் வருணன்மகிழ்ந் தேத்து நாமம்
இந்திரசித் தினைவதைக்க வெண்ணு நாமம்
சிலவிலங்குஞ் செப்பவருள் செய்த நாமம்
சீராம நாமமெனச் செப்பு வாயே.

6. கல்லாருங் கற்றாருங் கற்கு நாமம்
* கங்கைமுதற் றீர்த்தபலன் காட்டு நாமம்
வில்லாரும் வீரர்செயம் வேண்டு நாமம்
மெய்ம்மைக்கே பரியாய மேய நாமம்
சொல்லாருஞ் சொலவேட்குந் தூய நாமம்
தோமரக்க ருளத்தச்சந் தோற்று நாமம்
செல்லாரு மழையினருள் சிறக்கு நாமம்
சீராம நாமமெனச் செப்பு வாயே.

7. அரியகுகப் பெருமாளா தரித்த நாமம்
ஆயிரநா மப்பயனு மளிக்கு நாமம்
பெரியதிரு வடிபரவும் பெரிய நாமம்
பெரும்புண்ணி யப்பயனாப் பிறங்கு நாமம்
† உரியதந்தை யங்கதனுக் கோது நாமம்
ஒன்னாரும் வழுத்துபுக ழூற்ற நாமம்
தெரியவழற் றடவுள்முனந் தெளித்த நாமம்
சீராம நாமமெனச் செப்பு வாயே.

---

* ''தீர்த்தஸ்நானம் அநந்தகோடிபலதம் ஸ்ரீராம நாமாம்ருதம்'' என்பர் வடநூலார்.

† ''நிற்கின்ற செல்வம் வேண்டி நெறிநின்ற வுயிர்க ளெல்லாங் கற்கின்ற திவன்ற னாமங் கருதுவ திவனைக் கண்டாய்'' என்று அங்கதனுக் குரைப்பது காண்க.

8. ‡ இசையியற்கண் வாயார வேத்து நாமம்
ஓம்மையே நன்மைதரு மினிய நாமம்
நசையறச்சு தீக்கணாற்கு நயக்கு நாமம்
நமபடரு மிறைஞ்சியகல் நல்ல நாமம்
பசையறுத்த பரதனுளம் பதித்த நாமம்
பனிமொழியா ளகலிகைநற் பயன்கொ ணாமம்
* திசையனைத்துந் தொழவுரைத்துத் திருந்து நாமம்
சீராம நாமமெனச் செப்பு வாயே.

9. மலயமுனி யுலகறிய வழுத்து நாமம்
மலரயனே முதற்றேவர் வாழ்த்து நாமம்
அலையுமுயிர்க் கெலாமபய மளிக்கு நாமம்
அத்திரிமா முனியறிந்த வமுத நாமம்
நிலையில்பிறப் பறவெருளை நினைந்த நாமம்
நீணரகம் புகுவார்தாம் நினையா நாமம்
சிலைவலவன் சத்துருக்கன் தேறு நாமம்
சீராம நாமமெனச் செப்பு வாயே.

10. எத்திக்கு மெழுமுனிவ ரேத்து நாமம்
எவ்வுயிர்க்குஞ் சீவனமா மெண்ணு நாமம்
பத்திக்கு மூலமெனப் பன்னு நாமம்
பரமசிவ னுமையவட்குப் பகர்ந்த நாமம்

---

‡ இசைக்கண்ணும் இயற்கண்ணும் எனக.

* ஒவருர் ஒருவரைத் தொழும்போது 'ராம்ராம்' என்பது வடநாட்டு வழக்கு.

முத்திக்கு வித்தாக முன்னு நாமம்
  † முதியவரு மிளையவரு மொழியு நாமம்
சித்திக்கு மந்திரமாத் தேர்ந்த நாமம்
  சீராம நாமமெனச் செப்பு வாயே.

11. * தாரணியிற் கலிதெறுவே தாந்த நாமம்
  சபரிநெடுங் காலமுளஞ் சமைத்த நாமம்
† பேரணியி னவர்க்குநலம் பேணு நாமம்
  பிரியவந சூயைபுகழ் பேசு நாமம்
ஏரணியுந் திரிசடைக்கு மினிய நாமம்
  யான்சொலவு மெளிவந்த வின்ப நாமம்
சீரணியு முமையவள்முன் றெளிந்த நாமம்
  சீராம நாமமென்று சேர்க வீடே.

காராரு மேனிக் கருணாகர மூர்த்திக்
காரா தனையிதுவா வாதரித்து—நாரானே
சீராம நாமத் திருப்பாட் டிவணுரைத்தான்
மாரா கவன்கவிஞர் மன்.

---

† பல்முளையாரும் பல்வீழ்ந்தாரும் எ - று. ரா, ம இரண்டும் பல்வேண்டா எழுத்துக்கள்.

* கல்லந்தாரணை உபந்யசித்து மந்திரமாதல் காண்க.

† ''வரிசிலை நெடியேபன், பேர்படைத்தவர்க் கடியவர்க் கடியரும் பெறுவார், வேர்படைத்தவெப் பிறவியாற் றுவக்குணா வீடு.''

(கம்பர்)

# பாடல் குறிப்பு அகராதி

எண்: பாட்டு எண்.

சில எண்களுக்கு முன் 'சீராம' என வருவது சீராம நாமப் பாட்டு (பக். 40) என்பதைக் குறிக்கும்.


அகட்டைப் புனைய 106
அரனைப் படைக்குத் 53
அரிய குகப் சீராம. 7
அருகிருக்கும் புல்லாணி 26
அவியாத் தருப்பை 5
அன்புருக்கொ ளசோதைத் 47
அனுமனுக்கு நளிர்க 71
அனைபடைத்த வுயிர் 27

ஆசை யெலாம் 78
ஆற்றைக் கடவா 37

இகத்துக்கும் சீராம. 4
இசையியற்கண் சீராம. 8

உடலிருந்தே யிடரினுக் 58
உலகினி லெட்டைந் சீராம. 5
உனக்குரிய வருட்கடலிற் 96

எத்திக்கு மெழு சீராம. 10
எய்தாலு வால்குழைக்கு 81
எல்லணைத்த பிறை 30
எல்லா வுயிரு 75
எள்ளற் குரியமனப் 100

ஏரிதான் மாரியினுக் 3
ஏழாலே யளந்திட்ட 24
ஏழுலோகமும் வாழ 6

ஒருகூற னுமைகேள்வ 80
ஒழுக்கினா னீத்த 57
ஓலை கட்டித் தூதேகி 49

கங்கைக் கரைக்குக் 48
கடன்மிசைக் கிடந்த 7
கத்து கடல்சூழ் 11
கரியுந் திருவி 73
கல்லாருங் சீராம. 6
கற்ற நயித்துருவ 109
கறையடிக்குள் 39

கார்மாந்த காரமடு 18
கா்யா மலருங் 14
காராரு மேனிக் சீராம. 12
காலமெலாங் கணிகை 54

கிளையெலா நச்சுக் 55

குகைகண்டு தனியிருந்து 42
குடிபிடிக்கு மானப்பேய் 32
குருவடிவ சீராம. 3
குலையெடுத்த மரக் 34
குழலோம்பு வினிய விசை 28

கூவத்தே வீழ்ந்தசிறு 13

கொலைக் களிற்றிற் 108

சரிந்தகுழ றாங்கிய 59
சவத்தைப் பணியாற் 88
சற்றேனு மிரங்கீரோ 25

செகத்துக்க ணவதரிக்குஞ் 35
செகத்தைப் புரந்த 105
செல்லாலே மேலாப்பு 4

சேப்படைத்த சிவ 64

தழலை நிகர்த்த 86
தன்னையே தந்தை 107
தனக்குமே லொருவருள 51
தாதையார் சீராம. 2
தாய் வயிற்றிடை 101
தாயிருந்தும் முலை 70
தாரணியிற் கவி சீராம. 11
தாழியி னுக்குமுயர் 79
தானே வழங்க 68
திசைக்கும் வெப்ப 62
திரவிடமொன் றுறுமாயிற் 46
திருவினிய பொயகை வாழ்த்து—1
திலத்தளவும் பிறர்க் 84
தீவினைப் பெருக்காற் 44
துட்டவிரா வணனா 60
துருவனுக்குயர் 66
தூய நீயுயிர் 82
தெருளாசைப் பட்டறிந்து 38
தேகநிலை யாதநிலை 40
தேறா வொருவன் 91
தேனும் பாலும் 85
நம்பிரான் காளிங்க 76
நலத்துளுந் தீங்கே 98
நின்ன தாகுமால் 16
நீயிருக்குங் கோயிலென 89
நீழலொன்று மிலாத 83
நெஞ்சமென்ற 92
நெய்யிற் றனியே 17
பணவாசைப் பேய்கள் 21
பத்திச் சுவையே 103
பத்தி செய்து 12
பரகாலனை முதலாகிய 65
பல்லா யிரம்பழி 8
பழுவிருக்கத் தோல் 20
பாட்டா னளிகண் 33
பாடுபட்டுத் தேறிநிதிப் 29
பாந்தண் பணிவாய் 74
பாபத்தைக் காழ்த்தறிவு 19
பிரமனை முன் 50
பிரமாண்ட கோடி 61
பிள்ளைப் பருவத் 9
பீட்டைப் புரிந்த 104
பொருள் கொடுத்து 1
பொற்றை யுடலைப் 72
பொன்னினைக்கும் 22
மத்தேறு முதலாகப் 97
மருவேட்ட குழலார்க்கு 36
மலைபோ னிதியு 31
மலைய'முனி சீராம. 9
மறப்பினுக் கோரறை 56
மதியிருக்குஞ் சீராம 1
மறிகேட்டு வாங்கியதை 43
மறையெடுத்துன் 2
மனைவிட்டிலன் 15
மாகனக மேருவென 45
மாட்டாலு மயக்காலு 23
மாறுபட்டுரிய 69
முடியிருக்கு நெடுமாலுக்கு 41
முத்த மீரங்கு 90
முழுதுந் தெளிந்து 93
முற்றத் துறந்த 52
முறைகடந்து 67
மையோ மணியோ 99
வாள்பிடித்த கண்ணியர் 77
வான்மறந்த காலத்தும் 95
விதியோர்தர வியலாத வாழ்த்து-2
விதுவைத்ததலைச் 63
விள்ளற் கரிய 87
விழிவழியே தெரி 102
வெருடருங் கூற்ற 94
வெருவித்துயர்படு 10

# மகாவித்துவான் படைப்புகள்

## பதிப்பு நூல்கள் (15)

### அ) சங்க நூல்கள் (4)

| | | |
|---|---|---|
| அகநானூறு | 1901, | 1931 |
| குறுந்தொகைவிளக்கம் | | 1946 |
| பெரும்பாணாற்றுப்படை | | 1949 |
| பட்டினப்பாலை | | 1951 |

### (ஆ) பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் (4)

இனியவை நாற்பது — பழையவுரையுடன்
ஐந்திணை ஐம்பது — ,,
திணைமாலை நூற்றைமபது — ,,
நான் மணிக்கடிகை — ,,

### (இ) இலக்கண நூல்கள் (3)

நேமிநாதம்—மூலமும் உரையும் 1903
பன்னிரு பாட்டியல்
தொல்காப்பியம் : செய்யுளியல்
நச்சினார்க்கினியருரை 1917

### (ஈ) பிற நூல்கள் (4)

கனா நூல்
திருநூற்றந்தாதி
புலவராற்றுப்படை
முத்தொள்ளயிரச் செய்யுட்கள்

# ஆசிரியர் இயற்றிய நூல்கள்

## கவிதை நூல்கள்

| | |
|---|---|
| பாரிகாதை | 1937 |
| புலியெழுபது | 1927 |
| தொழிற் சிறப்பு | 1932 |

| | |
|---|---|
| திருவடிமாலை | 1933 |
| இராசராச சேதுபதி ஒரு துறைக்கோவை | 1984 |
| ஆத்தி சூடி உரை | 1985 |
| திருவேங்கட மாயோன் மாலை | 1995 |
| திருப்புல்லாணி யமக வந்தாதி | 1996 |
| நன்றியில் திரு | |

### உரைநடை நூல்கள்

| | |
|---|---|
| சேது நாடும் தமிழும் | 1924 |
| வஞ்சிமாநகர் | 1932 |
| அண்ட கோள மெய்ப்பொருள் | 1934 |
| நல்லிசைப் புலமை மெல்லியலார்கள் | 1932 |
| தமிழ் வரலாறு | 1941 |
| தித்தன் | 1949 |
| சோசர் | 1951 |
| செந்தமிழ் கட்டுரைகள் | 1987 |
| இனிய இலக்கியங்கள் | 1992 |
| கவிச்சக்கரவர்த்தி கம்பர் | 1994 |
| செந்தமிழ் இன்பம் | 1994 |
| தமிழகக் குறுநில மன்னர் | 1995 |

## (இ) மொழிபெயர்ப்பு

| | |
|---|---|
| அபிஜ்ஞான சாகுந்தலம் | 1938 |

## (ஈ) அச்சிடப் பெறாத நூல்கள்

இரகுவம்சம்
ஸீதா கலியாணம்
பகவத்கீதைத் தாழிசை
பாரதநீதி
பல்லட சதகம்
காவல் தலைமை
கடவுள் மாலை